18 வது உதவி உரிமையியல் நீதிமன்றம், சென்னை–600 104

| | |
|---|---|
| அ.வ.எண்.3262/2024 | தேதி .11.02.2026 |
| வா.சா 1 .B.Narasimhalu | வயது.62 |
| த/பெ .BellamKondaKondiah | Chennai. |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு பற்றிய முழு விவரங்களும் எனக்கு தெரியும். முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். 1,2 வாதிகளை நான் வழக்கில் விசாரிக்கவில்லை. 1,2 வாதிகளின் தகப்பனார் பெயர் தான் மாலக்கொண்டையா என்றால் சரிதான். மாலக்கொண்டையா என்னுடைய அண்ணன். நாங்கள் உடன்பிறந்தவர்கள் 4 சகோதரர்கள் மற்றும் 1 சகோதரி. என்னுடைய மூத்த சகோதரர் குப்பையா எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தார் என்றும் பின்னர் காணாமல் போய்விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அவருக்கு மாதவி என்ற மனைவியும் ஒரு மகளும் இருக்கிறார். இதை பற்றி வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என்னுடைய சகோதரி என்றால் சரிதான். நானும் என் சகோதரர் மாலக்கொண்டையாவும் சேர்ந்து 1,2 பிரதிவாதிகளின் மீது அசல் வழக்கு எண்.2406/1998 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு 31.01.2005 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் சொன்னேன். இந்த வழக்கில் அசல் வழக்கு எண்.2406/1998 ல் கண்டுள்ள பரிகாரங்களையும் பத்தி 10 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கு எண்.2406/1998 தள்ளுபடி செய்யப்பட்டது தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் வழக்குறிஞருக்கு தான் தெரியும். அதேபோல 2ம் பிரதிவாதி என்மீது அசல் வழக்கு எண்.2822/1999 என்ற வழக்கை 15 வது உதவி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளிலும் பொதுவான தீர்ப்புரை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்குளை தாக்கல் செய்தபோது நான் தாவா சொத்தின் 2ம் தளத்தில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் முதலாவது தளத்திலும் என்னுடைய சகோதரர் மாலக்கொண்டையா 2 வது தளத்திலும் என் சசோதரியான 2ம் பிரதிவாதி தரை தளத்திலும் வசித்து வந்தார். அசல் வழக்கு எண்.2822/1999 என்ற வழக்கு நான் தாவா இடத்தை விட்டு காலி செய்ய வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் என் அண்ணன் தான் காலி செய்தார். நான் சொல்வது தவறு என்றும் 2ம் தளத்தில் நான்தான் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. அந்த பொதுவான தீர்ப்புரையின் பேரில் AS NO.534/2005, 537/2005 என இரண்டு மேல்முறையீடுகளும் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடுகள் 06.02.2006 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல்முறையீட்டு எண்கள் SA NO.817/2009, 818/2009 என தாக்கல் செய்தோம் என்றும் அந்த மேல்முறையீடும் 28.01.2020 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும்

சொன்னால் சரியல்ல. என் பெற்றோர்கள் 04.08.1997 ல் என் சகோதரி திருப்பம்மாவுக்கு ஆவண எண். 1980/1997 என ஒரு Settlement ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.2406/1998 மற்றும் தற்போதைய வழக்கிலும் மேற்படி Settlement ஆவணத்தை ரத்து செய்ய எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டு உத்தரவு வாங்கியுள்ளோம். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு 2 வழக்குகளிலும் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டார்.

MATHIVANAN M

Digitally signed by MATHIVANAN M
Date: 2026.02.11 17:23:25 +0530

18 வது உதவி நீதிபதி,
சென்னை.